

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.9.2025) சென்னையில் நடைபெற்ற மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் சகோதரர் ஆர். சண்முகானந்தன் மகன் ஆர்தேஷ் ராமமூர்த்தி சந்திரவர்ஷினி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பால் வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ், மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமை! சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில்

# “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபடும் அம்பத்தூர் - வில்லிவாக்கம் தொகுதி பாக, சமூக வலைதள முகவர்கள் - இளைஞர் அணி ஒருங்கிணைப்பாளர்கள் பயிற்சிக் கூட்டம்!

### கழக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா ஆலோசனை வழங்கினார்!

சென்னை, செப்.11-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் சென்னை அம்பத்தூர் டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் அருகில் ‘நம் மண், மொழி, மானம் காத்திட’ “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதி மற்றும் வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதி பாக நிலை முகவர்கள் (BLA2), பாக சமூக வலைதள முகவர்கள் (BDA) மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர்கள் (BYO) பயிற்சிக் கூட்டம் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு பி கே சேகர்பாபு அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கழக துணை பொதுச்செயலாளர் திரு ஆ ராசா அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அம்பத்தூர் , வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிகளில் “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை பணியில் உள்ள 1770 களப்பணியாளர்களுக்கு உபகரணங்கள் வழங்கி, பணியில் சிறப்பாக செயல்பட்டவர்களை பாராட்டியும், தேர்தல் நேரங்களில் பாசிச சக்திகள் எப்படியெல்லாம் செயல்படும் என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லி அப்படிப்பட்ட சூழலில் எப்படி செயல்பட வேண்டும் என்று எடுத்துக் கூறி சிறப்புரையாற்றினார். மேலும் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் மகழக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா உணவு பரிமாறி சிறப்பித்தார்.



இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர மேயர் பிரியா ராஜன், ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, அ.வெற்றி அழகன்.எம்.எல்.ஏ, ப.தாயகம் கவி.எம்.எல்.ஏ,

ப.ரங்கநாதன் பி.கே.மூர்த்தி. எம்.சி, கூ.பீ.ஜெயின்.எம்.சி, ஓ.ஏ.நாகலிங்கம், சன் பி.முனியாண்டி.வே.வாசு, டி.எஸ்.பி. ராஜகோபால் எம்.சி , எம்.டி.ஆர். நாகராஜ், இரா.நரேந்திரன், என். கிருஷ்ண மூர்த்தி, பி.எம். யாழினி, பி. ஸ்ரீராமுலு.எம்.சி, சரிதா மகேஷ் குமார்.எம்.சி. பொதுக்குழு உறுப்பினர்கள் சாவித்திரி வீரராகவன் டி.வி. செம்மொழி எம் சி ரமேஷ் என்ற நீலகண்டன் எம்சி ஏ.பி. பூர்ணிமா எம் சி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: வானவில் விஜய், சுதா தீனதயாளன் எம் சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எஃப்.மோகன், து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி, லதா வாசு.எம்.சி, எம்.சுரேஷ், அம்பத்தூர்/கிழக்கு வடக்கு/தெற்கு/ வட்ட கழக செயலாளர்கள்: மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு. மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ. லால் பி.செந்தில்.வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, வில்லிவாக்கம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எ. வேதா, சீ.விக்னேஷ், ச. மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, சிட்கோ சேகர், ஆர்.தீனதயாான், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ)உமாசங்கர், சொ.முருகேசன், ப.லோகு பாபு, கே.எஸ்.பாபு. மற்றும் கழக செயல்வீரர்கள், முன்னாடிகள் BLA2 , BDA, BYO கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான 10 படகுக் குழாம்களில் கடந்த 4 மாதங்களில்

# 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் படகுச் சவாரி!

### அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

சென்னை, செப். 11-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நேற்று 10.9.2025 சென்னை, வாலாஜா சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், படகு குழாம்கள் மற்றும் சுற்றுலா குறித்து மண்டல மேலாளர்கள், மேலாளர்கள் மற்றும் பொறியாளர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைப்பெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத் தில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்க்கு சொந்தமான அனைத்து ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதி, ஓட்டல் மற்றும் படகு குழாம்களில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் பலதரப்பட்ட அனைத்து உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு சுற்றுலா பயணிகளுக்கு ஏற்றார் போல் உணவு வழங்கி விருந்தோம்பலில் சிறப்புடன் திகழவேண்டுமெனவும் அடிப்படை வசதிகளில் குறைகள் இருப்பின் அதனை உடனடியாக சரிசெய்து விருந்தினர்களை நல்லமுறையில் நடத்த வேண்டுமென்றும், அனைத்து மண்டல அலகுகளிலும் வரவு செலவு மற்றும் விருந்தினர் களிடம் விருந்தோம்பல் குறித்த தகவல்களை மண்டல மேலாளர் மற்றும் மேலாளர்களுடன் உரையாற்றி மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக, விருந்தோம்பல் சேவையை மேலும் சிறப்பாக நடத்த வேண்டுமென்று மண்டல மேலாளர்கள் மற்றும் மேலாளர்களுக்கு அறிவுறுத்தினார், தொடர்ந்து சுற்றுலா தொகுப்பு செயல்திறன் பற்றியும் தீவுத்திடல் வரவு செலவு மற்றும் மேம்பாட்டு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, முந்தைய ஆய்வு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் மீதான நடவடிக்கை குறித்தும் ஆலோசணை மேற்க்கொண்டார்.

மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்க்கு சொந்தமான ஊட்டி, கொடைக்கானல், முட்டுக்காடு உள்ளிட்ட 10 படகு குழாம்களில் கடந்த 4 மாதங்களில் 15,17,397 சுற்றுலா பயணிகளின் படகு சவாரி மேற்க்கொண்டுள்ளனர்.

இவ்வாறு அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் திருமதி ச.கவிதா, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கண்காணிப்பு பொறியாளர், திட்டப் பொறியாளர்கள், மண்டல மேலாளர்கள் மற்றும் மேலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் நேற்று (10.09.2025) சென்னை, வாலாஜா சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், படகு குழாம்கள் மற்றும் சுற்றுலா குறித்து மண்டல மேலாளர்கள், மேலாளர்கள் மற்றும் பொறியாளர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில், சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் ச.கவிதா சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கண்காணிப்பு பொறியாளர், திட்டப் பொறியாளர்கள், மண்டல மேலாளர்கள் மற்றும் மேலாளர்கள் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.


